**செ.வெ.எண்.391** **நாள் 28.06.2011**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.6.2011) D-2 அண்ணா சாலை காவல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், போக்குவரத்து விதிகளை மீறும் வாகன ஓட்டிகளுக்கு விதிக்கப்படும் உடனடி அபராதங்களுக்கு மின்னணு இரசீது வழங்கும் திட்டத்தையும் (Electronic Challan System for spot-fining Traffic Violators), எளிதில் எடுத்துச் செல்லத்தக்க சூரிய சக்தியால் இயங்கும் போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவி முறையினையும் (Portable Solar Traffic Signal System) தொடங்கி வைத்தார்கள்.

கையடக்கமான மின்னணு இரசீது வழங்கும் கருவி வழங்கும் திட்டம் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இக்கருவியின் மூலம் தொடர்ச்சியாக போக்குவரத்து விதிகளை மீறும் வாகன ஓட்டிகளையும், திருட்டு வாகனங்களையும் எளிதில் கண்டுபிடித்து விடலாம். இந்த கையடக்க மின்னணு கருவியில் வாகன எண்ணை பதிவு செய்து மீறப்பட்ட போக்குவரத்து விதி, விதியை மீறிய இடம், அபராதத் தொகை, நேரம் மற்றும் தேதி ஆகிய அனைத்து விவரங்களும் பதிவு செய்யப்படும். இக்கருவியிலேயே வாகன ஓட்டிகளின் கையொப்பம் பெற்றபின் வெளிவரும் ரசீதைக் கொடுத்து அபராதத் தொகை வசூலிக்கப்படும். அடுத்த கட்டமாக கிரிடிட் கார்டு மூலம் அபராதம் செலுத்தும் முறையும் அறிமுகப்படுத்தப்படும். இந்த கையடக்க மின்னணு கருவி சென்னை நகர போக்குவரத்து காவல் அதிகாரிகள் அனைவருக்கும் வழங்கப்படும். இந்த கருவியிலுள்ள தகவல்கள் அனைத்தும் சென்னை எழும்பூரில் உள்ள போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை “சர்வரில்’’ பதிவு செய்யப்பட்டு கணினி திரைகள் மூலம் (Computer Monitors) போக்குவரத்து போலீசார் கண்காணித்து வருவார்கள். போக்குவரத்து விதிகளை மீறும் வாகன ஓட்டிகளுக்கு இக்கருவி மூலம் உடனடி அபராதம் விதிக்கப்படும்.‘ இந்த மின்னணு இரசீது வழங்கும் முறை திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று மடிக்கணினி மூலம் தொடங்கி வைத்து, ஏழு போக்குவரத்துக் காவல் அலுவலர்களுக்கு மின்னணு இரசீது வழங்கும் கருவிகளை வழங்கினார்கள்.

எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய சூரியசக்தியால் இயங்கும் போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவிகள் (Portable Solar Traffic Signal System) 20 எண்ணிக்கையில் 26 இலட்சம் ரூபாய் செலவில் காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவிகள் (Traffic Signals) அமைக்கப்படாத இடங்களில் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய சூரியசக்தியால் இயங்கும் போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவிகள் பயன்படுத்தப்படும். இந்த சூரியசக்தியால் இயங்கும் போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவி, மின்சாரம் இல்லாத பகுதிகளிலும், பாதுகாப்பு பணியின்போதும், அதிக வாகனங்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படும் இடங்களிலும் பயன்படுத்தப்படவுள்ளது.இந்த எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய சூரியசக்தியால் இயங்கும் போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவிகளை உபயோகப்படுத்துவதால் மின்சார இணைப்பு மற்றும் சாலையில் பள்ளம் தோண்டுவது

தவிர்க்கப்படும். மேலும், சூரிய ஒளி இல்லை என்றாலும் மின்சாரம் மூலம் இதை பயன்படுத்தலாம். சூரிய சக்தியால் இயங்கும் எளிதில் எடுத்துச் செல்லத்தக்க இந்த போக்குவரத்து செல்லும் திசைகாட்டும் கருவி முறையினை (Portable Solar Traffic Signal System) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த இரு திட்டங்களைத் தொடங்கி வைத்த பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் D2 காவல் நிலையத்தில் உள்ள பார்வையாளர் புத்தகத்தில் பின்வரும் குறிப்பினை எழுதினார்கள்.

“I am happy to launch the Electronic Challan System and the portable Traffic Signal System for the Chennai City Police today.

Technology plays an important role in administration. This technology driven initiative of the Chennai City Police will go a long way towards better enforcement of traffic rules. The utility of these systems depends on the persons who handle them. The Police, as Law Enforcement Agents, should always strive to fulfil the aspirations of the people by serving them effectively. The Police are the visual symbols of authority. Therefore, your priority should be maintenance of Law and Order with a humane approach to the people whom you serve.”

பின்னர், அரியானாவில் நடைபெற்ற அகில இந்திய காவல்துறை தடகளப் போட்டியில் 10,000 மீட்டர் மற்றும் 5,000 மீட்டர் போட்டிகளில் தங்கம் வென்ற எப்–2, எழும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எஸ். ரகுநாத் அவர்களுக்கு ரூபாய் 1 இலட்சம் ரொக்கப் பரிசும், போல் வால்ட் போட்டியில் வெள்ளி வென்ற சென்னை புற நகர ஆயுதப் படை பெண் காவலர் டி. தமிழரசி அவர்களுக்கு ரூபாய் 30 ஆயிரம் ரொக்கப் பரிசும், 400 மீட்டர் மற்றும் 200 மீட்டர் போட்டிகளில் வெண்கலம் வென்ற திருச்சி–தமிழ்நாடு சிறப்பு காவல் 1வது அணி காவலர் ஆர். வீரமணி அவர்களுக்கு ரூபாய் 40 ஆயிரம் ரொக்கப் பரிசும், 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் போட்டிகளில் வெண்கலம் வென்ற சென்னை கமாண்டோ படை பெண் காவலர் பாப்பாத்தி அவர்களுக்கு ரூபாய் 40 ஆயிரம் ரொக்கப் பரிசும், போல் வால்ட் போட்டியில் வெண்கலம் வென்ற திருச்சி–தமிழ்நாடு சிறப்பு காவல் 1வது அணி முதுநிலை காவலர் எம். முகேஷ் அவர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் ரொக்கப் பரிசும், உயரம் தாண்டுதல் போட்டியில் வெண்கலம் வென்ற சென்னை ஆயுதப்படை பெண் காவலர் கிருஷ்ணராகா அவர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் ரொக்கப் பரிசும், மொத்தம் ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான ரொக்கப் பரிசினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி, வெற்றி பெற்றவர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
தேதி : 28.6.2011